மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, வாழையில் தமிழ் நாட்டில் மத்திய வாழை ஆராய்ச்சி நிலையம் ஆடுதுறை, தஞ்சை மாவட்டத்திலும், தோட்டக்கால் வாழை ஆராய்ச்சி நிலையம், உய்யக்கொண்டான் திருமலை, திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலும், மலை வாழை ஆராய்ச்சி நிலையம், மங்கள கொம்பு, மதுரை மாவட்டத்திலும், வாழை ஆராய்ச்சி நிலையம் வேலூரிலும் இருக்கின்றன.

* 40 *Q*.—Thiru L. BALARAMAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the acreage in which banana has been cultivated under intensive export scheme in North Arcot district?

திரு. எல். பலராமன் : மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

வட ஆற்காடு மாவட்டத்தில் தீவிர ஏற்றுமதி திட்டத்திற்கான வாழை எத்தனை ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : வட ஆற்காடு மாவட்டத்தில் தீவிர ஏற்றுமதித் திட்டத்திற்கான வாழை சுமார் 3,300 ஏக்கர் நிலத்தில் பயிரிடப் பட்டுள்ளது.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இதற்கு மத்திய அரசாங்கம் என்ன மானியம் வழங்குகிறது ? இந்த அதிகாரிகள் தனிப்பட்ட விவசாயிகளிடம் எவ்வளவு நபர்களிடம் தொடர்பு கொண்டார்கள் என்ற தகவல் அரசுக்கு இருக்கிறதாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, தனியாக அப்படிப் பட்ட உதவிகள் எதுவும் செய்யப்படவில்லை. கூட்டுறவுத் துறை மூலமாக அவர்களுக்குக் கடன் கொடுக்கிற திட்டம் இப்போது வந்திருக்கிறது.

Byracon Medicine

* 41 *Q*.—Thiru M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that ' Byracon ' medicine used to kill the red-nosed insects which attack the Cocoanut seedlings is not available now;

(*b*) whether the growth of cocoanut trees has been affected thereby; and

(*c*) if so, the action taken thereon?